[2002 அக்டோபர் 28

33–

வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

***13712–திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலையில் ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 34, மாண்புமிகு திரு. அ. அருணாசலம், பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.*

34–

புதிய வட்டம்

***9305–மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பெரம்பலூர் மாவட்டம், வரகூர் தொகுதி, குன்னம் வட்டம், மேற்குப் பகுதி மக்கள் நலன் கருதி, செட்டிக்குளம் பிர்க்காவை மையப்

2002 அக்டோபர் 28]

பகுதியாகக் கொண்ட ஆலத்துக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வரகூர் தொகுதியிலே செட்டிக்குளம் பிர்க்காவைச் சேர்ந்த ஆலத்துக்கோட்டையை மையமாக வைத்து பொதுமக்கள் தாலுகாவிற்கு வரவேண்டுமென்றால், அரக்கம்பட்டி, நத்தசேலம், செட்டிக்குளம், டி.களத்தூர், தேனூர் வழியாக 40 கிலோ மீட்டர் தூரம் குன்னம் தாலுகாவிற்குக் கிழக்குப் பகுதிக்கு வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்தத் தாலுகாவைக்கூட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 1994—லே தொடங்கி வைத்தார்கள். ஆனால் கிழக்குப் பகுதியிலே இருக்கிற மக்கள் பயன்பெறுகிற வகையிலே அமைந்திருந்தாலும், மேற்குப் பகுதியிலே உள்ள செட்டிக்குளம் பிர்க்காவை ஒரு தனி தாலுகாவாக ஆலத்துக்கோட்டையை மையமாகக் கொண்டு உருவாக்குவதற்கு கடுமையான நிதி நெருக்கடியிலே கருணை உள்ளத்தோடு திட்டத்தைச் செயலாற்றிக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இந்த ஆண்டிலாவது பரிசீலிக்கப்படுமா என்பதை உங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்திலே பெரம்பலூர் கோட்டம், அரியலூர் கோட்டம், உடையார்பாளையம் கோட்டம் என்று மூன்று கோட்டங்கள் இருக்கின்றன. அந்த பெரம்பலூர் கோட்டத்திலே, பெரம்பலூர் வட்டம், வேப்பந்தட்டை வட்டம், குன்னம் வட்டம் என்கின்ற மூன்று வட்டங்கள் இருக்கின்றன. இந்த குன்னம் வட்டம் மிகச் சிறிய வட்டம். இங்கே மக்கள் தொகை 2 இலட்சமாக இருக்கிறது. மேலும், அதனுடைய கிலோ மீட்டர் சுற்றளவு 8.46 சதுர கிலோ மீட்டர் ஆகும். ஏற்கெனவே வருவாய்த் துறை மூலமாக ஒரு வட்டத்தைப் பிரிக்க

வேண்டுமென்றால், குறைந்தது 3 இலட்சம் மக்கள் தொகை இருக்கவேண்டுமென்ற ஒரு வரையறை இருக்கிறது. எனவே, மக்கள் தொகை மிகக் குறைவாக இருப்பதன் காரணமாக மட்டுமல்லாமல், மேலும் கிலோ மீட்டர் மிகக் குறைவாக இருப்பதன் காரணமாகவும், இந்த வட்டம் மிகச் சிறிய வட்டமாக இருப்பதாலும் இதைப் பிரிக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

35–

மண் பரிசோதனை நிலையம்

***8947–திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சியில் மண் மாதிரி பரிசோதனை நிலையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டில் ஏற்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மண் பரிசோதனை நிலையங்கள் 19 மையங்களில் இயங்கி வருகின்றன. விழுப்புரம் மாவட்டப் பணிகளையும் உள்ளடக்கி கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு மண் ஆய்வு மையம் இயங்கி வருகிறது. எனவே, செஞ்சியில் விவசாய மண் ஆய்வு மையம் ஏற்படுத்தும் திட்டம் தற்போது அரசிடம் ஏதும் இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் இந்த விஞ்ஞான தொழில்நுட்ப நேரத்திலே விவசாயிகள் பண்டைய காலத்திலே பயன்படுத்தி வந்த அதே முறையைப் பயன்படுத்தி வருவதால், விவசாய மகசூல் அதிகமாகக் கிடைப்பதில்லை. அந்த மகசூலை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னால், அந்த விவசாயிகள் மண்ணின் தன்மையை அறிய வேண்டும். மாண்புமிகு அமைச்சர்